# துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்

Praise the Lord:

நமது ஆண்டவராகிய கிறிஸ்து, மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமும் உள்ள தேவன்.
அவர் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

சங்கீதம்/Psalm 86:1-2 (பக்கம் 724)

கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; நான் சிறுமையும் எளிமையுமானவன்.
என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பக்தியுள்ளவன்; என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும்.

Hear, O LORD, and answer me, for I am poor and needy.
Guard my life, for I am devoted to you. You are my God; save your servant who trusts in you. (NIV)

*நமது விண்ணப்பங்களுக்கு அவர் செவிகொடுக்க ஜெபிப்போம்.*

## Let us pray. ..

சங்கீதம்/Psalm 86:3

**ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.**

3 Have mercy on me, O Lord, for I call to you all day long.
Be merciful to me, O Lord, for I am calling on you constantly. (NLT)
Be merciful unto me, O Lord: for I cry unto thee daily. (KJV)

**எப்பொழுதும் கர்த்தரை நோக்கி நாம் ஜெபிக்கவேண்டும்.** இப்பொழுது நாம் ஜெபிப்பது மட்டுமல்ல எப்பொழுதும் ஜெபிக்கிறவர்கள்.

சங்கீதம்/Psalm 86:4

**உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும்:**
**ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.**

4 Bring joy to your servant, for to you, O Lord, I lift up my soul.
Rejoice the soul of thy servant: for unto thee, O Lord, do I lift up my soul. (KJV)

**ஆத்துமா மகிழ்ச்சியாக இருக்குமானால்,**
**நமது மாம்சத்தின் பெலவீனங்களை நாம் தாங்கிக்கொள்ள முடிவும்.**
**நமது பெலவீனங்களிலும், உற்சாகமாக கர்த்தரிடத்தில் ஜெபித்து ஆறுதலை பெறலாம்.**

(மகாவறட்சியான காலங்களில்…நம் ஆத்துமாவை திருப்தியாக்குகிறவர். . )
(அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.)

சங்கீதம்/Psalm 86:5

**ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.**

5 You are forgiving and good, O Lord, abounding in love to all who call to you.

*அவரை நோக்கி கூப்பிடுகிற நமக்கு கிருபை அளிக்கவல்லவர்*
**கர்த்தர் நல்லவர். நமது பாவங்களை மன்னிக்கிறவர்.**

ஒரு ஸ்தீரீக்கு, பாவத்திற்கான தண்டனை கொடுக்க வேதபாரகரும், பரிசேயரும் மக்களும் ஒன்று கூடியபோது, அந்த தண்டனையிலிருந்து அந்த பெண்ணை விடுவித்தார் நமது கிறிஸ்து. அப்பொழுது,
இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார். (யோவான் 8:11)

**இப்படி நம்மையும். . நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்று அவர் கிருபையோடு மன்னிக்கும்போது, நாம் அவரைவிட்டுச் சென்றுவிட்டால், நமது பெலவீனங்களும் உலகத்து சூழ்நிலைகளும் நம்மை மீண்டும் பாவத்தில் வீழ்த்திவிடும்.**

நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்று அவர் சொன்னபிறகு அவர் ஜனங்களை நோக்கி இன்னொரு வார்த்தை சொல்கிறார்.
நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார். (யோவான் 8:12)

**அவரை விட்டு பிரியாமல் அவரையே பின்பற்றி, நமக்கு உதவிக்கு அவரையே கூப்பிடும்பொழுது, அவர் நமக்கு செவிகொடுத்து நம்மை வழிநடத்தி நாம் இரட்சிப்பை காத்துக்கொள்ள அவர் கிருபை உள்ளவராக இருக்கிறார்.**

**ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.**

*தேவைக்கு அவரை கூப்பிடுகிறவர்களாக இல்லாமல், அவரைபின்பற்றி நாடோறும் கூப்பிடுவோம்.*

சங்கீதம்/Psalm 86:6-7

**கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.**

Hear my prayer, O LORD; listen to my cry for mercy.
நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.
In the day of my trouble I will call to you, for you will answer me.

கூப்பிடகிறயாவர்மேலும் கிருபை நிறைந்தவர். நிச்சயம் நம் கூப்பிடுதலையும் கேட்பார். எனக்கு செவிகொடுத்து, என் விண்ணப்பத்தை கவனியும் என்று மன்றாடும்பொழுது, கர்த்தர் நிச்சயமாகவே நம் விண்ணப்பத்தை கேட்டருளுவார். ஆமென்.

துயரமில்லாத மக்களே இல்லை எனலாம்.

**இந்த துயரமானது. . .. .**

**நமக்குரிய துயரமாக இருக்கலாம், மற்றவர்களுக்குரிய துயரமாகவும் இருக்கலாம்..**

**எனக்கு துயரமில்லையென்றாலும் உங்கள் துயரத்துக்காக ஜெபிக்கவேண்டும்.**

நம் அனைவருக்குமே நமக்கென்று துயரமில்லையென்றாலும் நம் உற்றார் உறவினர்களுக்கான துயரம் நிச்சயமாக நமக்கு இருக்கும்.

நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.
நான் **துன்பத்தின்** நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்: (சங் 138:7)

உயிர்ப்பிக்கிறவர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறார். ஆமென்.

நீதிமானுக்கு வரும் **துன்பங்கள்** அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங் 34:19)

நீதிமான் - கிறிஸ்துவின்மேல் நம் விசுவாசம் - நம்மை நீதிமானாக்குகிறது.

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். (ரோமர் 4:25)

அப்படி நீதிமான்களாக்கப்பட்ட நமக்கு வரும் **துன்பங்கள்** அநேகமாயிருக்கும்,
துயரப்படுகிற நாளில் நாம் கூப்பிடும்பொழுது அவர் கேட்டருளுவார்.
துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நம்மை உயிர்ப்பிப்பார்.

Ref: Dictionary:

துயரம்: 1. துன்பம், துன்பத்தால் விளையும் வருத்தம் அல்லது சோகம். Sorrow, grief, suffering.
2. தேவையானதையும் இழந்து படும் துன்பம். Misery, distress

துன்பம்: 1. மனத்துக்கு மகிழ்வைத் தராத உணர்வு, மனத்தை வருந்தச் செய்யும் உணர்வு misery, suffering, pain
2. கெடுதல், தீங்கு, harm

***மனத்தை வருந்தச் செய்யும் உணர்வு (துன்பம்)  துன்பத்தால் விளையும் வருத்தம் (துயரம்)***

துன்பம்…துயரம்…நீதிமான்களாக்கப்பட்ட நமக்கு அநேகமாயிருக்கும். நாம் பயப்படத்தேவையில்லை.
நான் **துன்பத்தின்** நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்: (சங் 138:7)
ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவான் 8:51)

நாம் நம்மைப்பற்றி கவலைப்பட எதுவுமே இல்லை. மரணத்தை வென்ற ஆண்டவரோடு இருக்கும் நாமும் மரணத்தை காண்பதில்லை. ஆமென்.

மரணத்தை உண்டாக்குகிற இந்த உலக துக்கத்திலே (துன்பத்திலே) நான் நடந்தாலும் கிறிஸ்து என்னை உயிர்ப்பிப்பார். ஆமென். *பின் ஏன் நாம் கவலைப்பட வேண்டம்??*

இப்படி சொல்லத் தகுதியில்லாமலும், இப்படிப்பட்ட ஆண்டவரை அறியாமலும் இருக்கிற மக்கள் துன்பத்திலே நடக்கும்பொழுது அவர்கள் மரணத்தை அடைகிறார்கள்.
அவர்கள் அதை அறியவில்லையென்றாலும் நாம் அதை அறிந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட மக்கள் என் உறவினர்கள், நண்பர்கள். . .உங்கள் உறவினர்கள், நண்பர்கள். . இந்த ஆலயத்தை சுற்றியுள்ள எவ்வளவோ மக்கள். . . . .

இவர்கள் இந்த உலக துக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களும் "மரணத்தை காண்பதில்லை" என்ற தகுதியை அடையவேண்டும் ஆண்டவரே என்ற துயரம் நம்மை ஆட்கொள்ளவேண்டும்.

நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.

இப்படிப்பட்ட விசுவாசம் நமக்கு வளருமானால்…..
கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக எண்ணமுடியும். ஆமென்.

***மனத்தை வருந்தச் செய்யும் உணர்வு** (துன்பம்)   **துன்பத்தால் விளையும் வருத்தம்** (துயரம்)*

*துக்கம் ?*       Ref: Dictionary: **துக்கம்**: (இழப்பால் ஏற்படும்) **மன வருத்தம்**. sorrow, grief

துன்பம்…துயரம்….துக்கம்…நீதிமான்களாக்கப்பட்ட நமக்கு அநேகமாயிருக்கும். நாம் பயப்படத்தேவையில்லை. . ..

*வேதம் ஒரு இடத்திலே துக்கத்தை 2 வகையாக பிரித்துக்காட்டுகிறது. . . ..*

2 கொரிந்தியர்/2 Corinthians 7:10 (பக்கம் 250)

தேவனுக்கேற்ற **துக்கம்** பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.

Godly sorrow brings repentance that leads to salvation and leaves no regret, but worldly sorrow brings death. (NIV)

எனக்கு தேவனுக்கேற்ற துக்கம் வந்து ஆட்கொண்டபோது நான் இரட்சிக்கப்பட்டேன். இப்பொழுது என்னுடைய துக்கம் (துயரம்) இரட்சிக்கப்படாதவர்களுக்காக இருக்கவேண்டும்.

நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.

**நம்முடைய உற்றார், உறவினர்கள், நன்பர்கள் பலவித லொகீக துன்பத்திலே இருக்கிறார்கள்.**

**அவர்கள் அப்படியே இருந்து மரணத்தை அடையாமல் அவர்களை அதிலிருந்து மீடக,**

**நமது ஆண்டவராகிய கிறிஸ்து,**

**மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமைவும், பூரண கிருபையும், சத்தியமும் உள்ள தேவன்.**

**அவர்களுடைய அப்படிப்பட்ட எல்லா துயரங்களையும் நீக்கி, அவர்களும் தேவனுக்கேற்ற துயரத்தை மட்டும் உடையவர்களாக மாற்றும் ஆண்டவரே என ஜெபிப்போம்.**

*It is like chain reaction…..*

இப்படிப்பட்ட **துக்கத்தை சந்தோஷமாக மாற்றுகிறவர் நம்தேவன்.**

மத்தேயு/Matthew 5:4 (பக்கம் 6)

**துயர**ப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

Blessed are those who mourn, for they will be comforted.

தேவனுக்கேற்ற துயரம் நமக்கு அதிகமாகும்போது.. ., சகலவிதமான ஆறுதலின் தேவன் நமக்கு அதிகமான ஆறுதலைக் கொடுப்பார். அப்பொழுது நாம் கர்த்தருக்குள் புதிய உற்சாகமடைவோம்.

கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக எண்ணுவோம்.

கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவை நோக்கி பொறுமையுடன் ஓடுவோம்.

*(மற்றவர்களையோ என்னையோ உங்களையோ பார்க்காதீர்கள். கர்த்தரை நோக்கிப்பார்த்து ஜெபியுங்கள்...)*

மீண்டுமாக……சங்கீதம்/Psalm 86:7 (பக்கம் 724)

நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.

மீண்டுமாக இன்னொருவர். ……..... மீண்டுமாக இன்னொருவர்…….. .. மீண்டுமாக இன்னொருவர். ..

*(கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசமாயிருக்கும். . )*

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

## **Let us Pray**